தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

5: அரசினர் ர்மனங்கள்.

(அ) அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேரவை விதி 30 (3)-ன் கீழ் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4 'தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள் மீது விவாதம்' என்பதனை ஒத்தி வைத்து, இனம் 5 அரசினர் சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) என்பதனை எடுத்துக் கொள்ளபெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது,

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள் - தொடர்ச்சி.

(உ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1982

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்து, மேற்படி சட்ட முன்வடிவு *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் நடைபெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தது, இப்போது அலுவல் வரிசையில் மாற்றம் செய்யப்பட்டு, இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்து, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும் என்று சொல்வதால், இதன் மீது உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு சிரமமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கூட்டுறவுச் சங்கங்கள் குறித்து ஒரு 'காம்ரஹென்சிவ் ஆக்ட்' கொண்டுவர இருப்பதால், அதையும் படித்துப்பார்த்துவிட்டு, இந்தச் சட்டமுன்வடிவின் மீது கருத்துக்கள் கூறுவது பொறுத்தமாக இருக்கும்,

---

*1982, ஆகஸ்ட் 31 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.